# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

## 2021

## රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

## அரச கணக்குகள் திணைக்களம்

## Department of State Accounts


| මහා භාණ්ඩාගාරය | பொது திறைசேரி | General Treasury |
| --- | --- | --- |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

## உள்ளடக்கம்


**அத்தியாயம் *01* – நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு**

| | | |
|---|---|---|
| *1.1* | அறிமுகம் | 1 |
| *1.2* | நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் | 1 |
| *1.3* | பிரதான செயற்பாடுகள் | 2 |
| *1.4* | திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் | 2 |
| *1.5* | நிறுவன விளக்கப்படம் | 3 |

**அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** 4

**அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் *31* முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| *3.1* | நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று | 13 |
| *3.2* | நிதி நிலைமை பற்றிய கூற்று | 14 |
| *3.4* | காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 15 |
| *3.5* | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 16 |
| *3.6* | வருமான சேகரிப்பு செயலாற்றுகை | 17 |
| *3.7* | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 17 |
| *3.8* | நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு | 17 |
| *3.9* | நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றகை | 18 |
| *3.10* | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 19 |

**அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்**

| | | |
|---|---|---|
| *4.1* | நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) | 32 |

**அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| *5.1* | அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக | 36 |
| *5.2* | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக | 36 |

**அத்தியாயம் 06 – மனித வள விபரம்**

| | | |
|---|---|---|
| *6.1* | பதவியணி முகாமைத்துவம் | 37 |
| *6.2* | பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக | 37 |
| *6.3* | மனித வள அபிவிருத்தி | 38 |

**அத்தியாயம் 07– இணக்க அறிக்கை** 38

## *அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு*

### 1.1. அறிமுகம்

முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கும், அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் தகவல்களை வழங்குவதனை நோக்காகக்கொண்டு அரசாங்க வருமானங்கள், அரசாங்க செலவினங்கள், முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகள் உட்பட இலங்கையின் அரசிறை நிதி நடவடிக்கைகளை அறிக்கையிடும் மத்திய நிறுவனமாக அரச கணக்குகள் திணைக்களம் தொழிற்படுகிறது.

### 1.2 எமது நோக்கு

''அரசிறை நிதித் தகவல்கள் தொடர்பில் உன்னத நிலையமாக'' திகழ்வதாகும்.

### எமது பணி

தீர்மானம் எடுப்பதற்கும், இணக்கப்பாட்டையும், அறிக்கையிடலையும் மேம்படுத்துவதற்கும் அரசாங்க அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் அரசிறை நிதி தகவல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த நிதி கூற்றுக்களை அதன் சகல தரப்பினருக்கும் வழங்குபவர்களாகச் செயற்படுதல்.

### எமது நோக்கங்கள்

- தேசிய வரவுசெலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களுக்கு கணக்கு ரீதியான உதவிகளை வழங்கல்.
- புள்ளிவிபரவியல் தகவல்களை உருவாக்குவதற்கு சகல கணக்கு அலகுகளிலிருந்தும் தகவல்களைத் திரட்டுவதன் மூலம் கணக்குத் தரவுத் தளம் ஒன்றைப் பேணிவருதல்.
- சர்வதேச கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப அரச கணக்குகளின் தரத்தை தொடர்ந்தும் உயர்த்துதல்.
- அரச நிதி முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தல்.
- இலத்திரனியல் வடிவமைப்புக்களில் கணக்கீட்டுத் தகவல்களை தன்னியக்க ரீதியில் உண்டாக்குவதற்கு கணக்கீட்டு அலகுகளில் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்தல், மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்குத் தேவையான உதவி வழங்கல்.
- உரிய காலத்தினுள் தரமான தீர்மானங்களை எடுப்பதற்கு நிதி புள்ளி விபரங்களைச் சமர்ப்பித்தல்.
- நிதி செயலாற்றுகையுடன் ஒருங்கிணைப்பதற்கு நிதியல்லாத செயலாற்றுகைச் சுட்டியின் அபிவிருத்திக்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

## 1.3 *பிரதான செயற்பாடுகள்*

1. அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக மத்திய கணக்கீட்டு முறைமையொன்றை நடைமுறைப்படுத்தல்

2. அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றை செயல்படுத்துவதுடன், மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமையைப் பராமரித்து, மாற்றமடைகின்ற தேவைக்குப் பொருத்தமான விதத்தில் அவற்றை இற்றைப்படுத்தல்.

3. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய கணக்கீட்டு முறைமையைப் பேணிவருவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குதலும், அதற்கேற்ப கணக்கீட்டு பதவியினருக்கு பயிற்சி வசதிகளை வழங்கலும்.

4. வருமானம் மற்றும் செலவினம் பற்றிய கணக்கீட்டு தகவல்களை கணக்காய்வாளர் அதிபதிக்கும், மத்திய வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் ஏனைய அவ்வாறான நிறுவனங்களுக்கும் வழங்குதல்

5. நியதிமுறைத் தேவைகளுக்கு ஏற்ப வருடாந்தம் குடியரசு கணக்குகளைத் தயாரிப்பதும், அவற்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதும்.

6. அரசாங்கத்தின் உத்தேச சம்பள பட்டியல் செயலாக்க தொகுதி தடைகளின்றி தொழிற்படுவதற்குத் தேவையான உதவியை வழங்கல்.

## 1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1. நிதி அறிக்கையிடல் பிரிவு
   - 1.1. கணக்கு தொழிற்பாடு மற்றும் சம்பள மென்பொருள் முகாமைத்துவ பிரிவு
   - 1.2. பெரும்பாக மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு
2. தரவுப் பகுப்பாய்வு
   - 2.1. அரச நிதி புள்ளிவிபரவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு
3. டிஜிட்டல்மயப்படுத்தும் பிரிவு
   - 3.1. கட்டமைப்பு மற்றும் கொள்கைத் திட்டமிடல்
   - 3.2. கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
   - 3.3. திறைசேரி ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு, நிதி தகவல் மற்றும் அறிக்கையிடல்.
4. தாபன, கணக்கு மற்றும் கணக்குக் கொள்கைகள்
   - 4.1. கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கொள்கைகள்
   - 4.2. கணக்குப் பிரிவு
   - 4.3. நிதிப் பிரிவு

## 1.5 ஒழுங்கமைப்பு கட்டமைப்பு



## அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அரச நிதித் தகவல்களை அறிக்கை செய்வதை அபிவிருத்தி செய்தல், அவற்றை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பேணிச் செல்லுதல் பொருட்டு எமது திணைக்களத்தின் திறன்களைக் கொண்டு நிருமாணிக்கப்பட்ட நேுறு ஊஐபுயுளு மென்பொருளில் மேன்மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள், 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில், புதிய தேவைப்பாடுகள் மற்றும் பயனர்களது கருத்துக்களின் அடிப்படையில் ஊஐபுயுளு கணக்கு கட்டமைப்பொன்றை பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் நேுறு ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தில் அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை சரிசெய்வதன் ஊடாக சரியான கணக்கீட்டு தகவல்கள் கட்டமைப்பை பேணிச் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிகாஸ் பொழிப்பினை ஒருங்கிணைத்தல் மற்றும் தரப்பினருக்கு அறிக்கை செய்தல் தொடர்பில் நேுறு ஊஐபுயுளு இணைய வலைப்பயன்பாடு(றநடி யீ) இன்னமும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அனைத்து செலவு அலகுகளுக்குமுரிய சொத்துக்களை திறைசேரியினால் வெவ்வேறாக பரிசோதிப்பதற்கு ஏற்ற வகையில் மத்திய அரசின் சொத்துக்கள் வலையமைப்பை, சேவைபெறுநர் பதிவேற்றம் செய்து கொள்வதன் ஊடாக செலவு அலகுகளுக்கு சொத்துக்களது ஆரம்ப மீதி மற்றும் கொள்வனவுகளை நிகழ்நிலை முறைப்படி உள்ளடக்குவதற்கு வசதிகளை வழங்கும் செயற்பாடு 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

நேுறு ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தை மிகச் சிறப்பாகப் பேணிச் செல்லும் பொருட்டு, நேுறு ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சொத்து அறிக்கையிடல் தொடர்பான அறிவுறுத்தல் செயற்பாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்துவோருக்கான உதவிக் குழுக்களை பேணிச் செல்லும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

இடம்பெற்ற அமைச்சுக்களது மீளாய்வுகளின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்ட அமைச்சுக்கள் ∴ திணைக்களங்கள் ∴ நிறுவனங்களின் கணக்கு மூடும் செயற்பாடுகள் இடம்பெற்ற விதங்கள் மற்றும் புதிதாக அமைச்சுக்கள் ∴ திணைக்களங்கள் ∴ நிறுவனங்கள் தாபிக்கப்படும்போது புதிதாக கணக்குகள் திறக்கப்பட வேண்டிய விதங்கள் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் தொழிநுட்ப உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனூடாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் இந்த செயற்பாட்டில் ஒரு முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்ததுடன், மத்திய அரசிற்குரிய 1900 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கில் வைப்பதற்கு இதன் ஊடாக வாய்ப்பும் கிட்டியது.

பயனர் கணக்குகளிலுள்ள சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு செயலற்ற கணக்குகள் அகற்றப்பட்டு இற்றைவரைப்படுத்தப்பட்டது. மாகாண சபைகளுக்கு நேறு ஊஐபுயுளு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது இத்திட்டம் காணப்படுகின்ற சப்பிரகமுவ மாகாண சபைக்குப் புறம்பாக வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணத்திற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாண சபைகளினது சொத்துக்கள் கணக்கில் வைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறே பயனர்களால் மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற பல பிழைகள் அடையாளங்காணப்பட்டு, அப்பிழைகளை தவிர்ப்பதற்காக மென்பொருள்களது பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்தப்பட்டன.

2022 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கமைய காலாண்டு ரீதியில், வரவு செலவுத் திட்ட உச்ச வரம்பு (டீரனபநவ ஊநடைபைெ) மற்றும் பண உச்ச வரம்பு (ஊயளா ஊநடைபைெ) ஆகியவற்றை நேறு ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்குவதற்குத் தேவையான வசதிகள் வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

வருட இறுதியில் நேறு ஊஐபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கணக்கு நடவடிக்கைகள் நிறைவு செய்தல், சொத்துக்களை கணக்கு வைக்கும்போது எழுந்த பிரச்சினைகளைத் தீர்த்தல், இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பாக தேவைப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக அனைத்து அரச அமைச்சுக்களுக்கும் பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன. மேலும் வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கு 6 பயிற்சி அமர்வுகளும் நடாத்தப்பட்டன. அவ்வாறே தற்போதுள்ள கோவிட் 19 நிலைமைகளின் கீழ் 25 மாவட்ட செயலகங்களில் நிகழ்நிலை முறையில் பயற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன. 150 அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களது பிரதிநிதித்துவத்தில் 170 உத்தியோகத்தர்களுக்கு சொத்துக்களை கணக்கில் வைத்தல், 2022ஆம் ஆண்டிற்கான பண உச்ச வரம்பினை (ஊயளா ஊநடைபைெ) உள்ளடக்குதல் என்பன தொடர்பில் 02 பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன.

நிதியாண்டின் இறுதியில் கணக்கை நிறைவு செய்தல் தொடர்பில் தேவையான வழிகாட்டல்கள், அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் வருடாந்த வருமானக் கணக்குகளுக்குப் பதிலாக, நிறுவனங்களது வருமானம் மற்றும் செலவுத் தகவல்களை உள்ளடக்கி, காசு அடிப்படையின் கீழ் வரும் நிதிக்கூற்று தொகுதியொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே உரிய விதத்தில் நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் மற்றும் கணக்கிணக்க அறிக்கைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு, தீர்க்கப்படாத பிரச்சினைகள் காணப்படுகின்ற நிறுவனங்கள் வரவழைக்கப்பட்டு, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான வழிகாட்டல்கள் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

இதற்குப் புறம்பாக பிரேரிக்கப்பட்ட திறைசேரி ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை (ஐவெநபசயவநன வுசநயளரசல ஆயயெபநஅநவெ ஐகெழசஅயவழைெ ளுலளவநஅ – ஐவுஆஐளு) அபிவிருத்தி செய்யும் செயன்முறைக்கு தொடர்ச்சியாக பங்களிப்பை வழங்குவதும் இந்த வருடத்தின் முக்கியமான செயற்பாடாகும்.

விசேட செலவு அலகு, திணைக்களம் மற்றும் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் செலவுத் தலைப்பு 139இற்கு (முன்னைய வருடத்தின் 48உம் உள்ளடங்கலாக) 2021ஆம் ஆண்டில் ஐவுஆஐளு நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இந்த 139 நிறுவனங்களது நாளாந்த அறிக்கையிடல் நிதித் தகவல்களின் அடிப்படையில் அந்த நிறுவனங்களது கட்டுநிதி தேவைப்பாடானது, திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்தினால் நாளாந்தம் தீர்மானிக்கப்பட்டு, கட்டுநிதி விடுவிக்கப்படும். இதன்போது அனைத்து பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள், கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டதன் பின்னர் திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களமானது கட்டுநிதியை விடுவிப்பதால், தேவையற்ற விதத்தில் மேலதிக நிதி, கணக்குகளில் பேணிச் செல்லப்பட வேண்டியது அவசியமில்லை. ஆகவே நிதி மற்றும் சந்தர்ப்பச் செலவுகளை குறைப்பதற்கு முடிந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டவிதத்தில் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை, இந்த நிகழச்சித்திட்டத்தை பயன்படுத்துவதற்கு, ஈடுபடுத்துவதற்குத் தேவையான பயிற்சி அமர்வுகள் கோவிட் 19 நிலைமைகள் காரணமாக வரையறுக்கப்பட்டன. அதன் காரணமாக ஐவுஆஐளு கட்டமைப்பினை அரச அலுவலகங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான 2021ஆம் ஆண்டின் இலக்கை அடைந்து கொள்ள முடியாமற் போனதெனினும், 2021ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் பாரியதாகும்.

ஐவுஆஐளு கணனி நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தி 2017ஆம் ஆண்டு தொடக்கம் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. அதன் ஊடாக வரவுசெலவுத்திட்ட திணைக்களம் மற்றும் செலவுத் தலைப்புக்களது அனைத்து உத்தியோகத்தர்களும் தொடர்ச்சியாக கட்டமைப்பில் தரவுகள் மற்றும் தகவல்களை பரிமாற்றி வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயாரிக்கின்றனர். அதன்போது கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் இன்றி துரிதமான தகவல் பரிமாற்றல் காரணமாக வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் வினைத்திறனாக மாறியுள்ளது. மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பிற்கு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை தயார் செய்யும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வழங்கப்பட்ட அனைத்து கட்டளைகள் மற்றும் விதிகளின் அடிப்படையில் தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தகவல்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீள நிதிசார் தீர்மானங்கள் எடுப்பதற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் இந்த கட்டமைப்பிற்குள் வழங்கப்பட்டுள்ளன.

2019 ஒக்டோபர் மாதம் தொடக்கம் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69இன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஒதுக்கீட்டு மாற்றல்களையும் இந்த கட்டமைப்பில் மேற்கொள்வதற்கான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன்போது அனைத்து நிறுவனங்களிலும் நி.பி.66 மற்றும் 69 மாற்றல் பத்திரங்களைத் தயாரிக்கின்ற உத்தியோகத்தர்கள் தொடக்கம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வரையான அனைத்து உத்தியோகத்தர்களாலும் வழங்கப்பட்ட கட்டளைகளையும் உள்ளடக்கியதாக தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே ஆவணங்களின்றி இத்தகைய செயற்பாடுகளை இணையத்தள பிரவேசத்தின் ஊடாக நிறைவேற்றுவதன் ஊடாக காலம், ஊழியம் மற்றும் செலவுகள் குறைந்து இந்த செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மத்திய அரசின் அனைத்து நிறுவனங்களுக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 தொடக்கம் வரவுசெலவுதிட்ட மதிப்பீடுகளை அச்சிடுவதற்குத் தேவையான தரவுகளை தயாரித்தல் மற்றும் வரவுசெலவுத்திட்டத்தை இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அச்சிடப்பட்ட புத்தகங்களாக வழங்குவதற்குத் தேவையான அனைத்து தயாரிப்புக்களையும் ஐவுஆஜஞ கணனி கட்டமைப்பிற்குள் மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே கடந்த வருடத்தில் உண்மைச் செலவு தொடர்பான தகவல்களும் கட்டமைப்பிற்குள் பெற்றுக் கொள்வதற்கு முடிந்தமை காரணமாக அந்தத் தகவல்களையும் மதிப்பீட்டிற்குள் உள்ளடக்க இலகுவாக அமைந்துள்ளது.

நிதியாண்டின் இறுதியில் கணக்குகளை நீறைவு செய்தல் தொடர்பில் தேவைப்படுகின்ற வழிகாட்டல்கள் மற்றும் 2021ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல்கள், சரியான விதத்தில் உரிய திகதிகளில் வழங்கப்பட்டன. அறிக்கை செய்யும் நிறுவனங்களுக்கு வசதியாகவும், மிகவும் தெளிவாக அமையும் விதத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு 2021ஆம் ஆண்டிற்குரிய படிவங்களில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடல் மற்றும் வருட இறுதியில் கணக்குகளை நீறைவு செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவு அலகுகள் மற்றும் மாவட்டச் செயலகங்களை உள்ளடக்கிய விதத்தில் பயிற்சித் தொடர்கள் நடாத்தப்பட்டன.

10 வருடங்களுக்குள் அட்டுறு அடிப்படையில் கணக்குகளைத் தயாரிப்பதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில், அரசின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, அட்டுறு அடிப்படையில் கணக்கு முறைகளை மாற்றும் வரையான இடைக்காலத்திற்கு, தற்போது பின்பற்றப்படுகின்ற பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்குப் மேலதிகமாக ஈடுபடுத்தக்கூடிய விதத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச துறையின் 15 கணக்கீட்டு நியமங்களை அரச கணக்குகளை

தயாரிப்பதற்கு உரிய விதத்தில் தயாரிக்கப்பட்டது. அதற்கு அமைவான விதத்திலான கணக்கீட்டு சட்டகமும் (யுஉஉழரவெைபெ குசயஅநறழசம) அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த கணக்கீட்டு சட்டகம் மற்றும் நியமங்கள் மற்றும் அதற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட கடந்த 03 வருடங்களது நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சு மற்றும் திணைக்களங்களது முற்பண பீ கணக்குகளில் காணப்படுகின்ற நிலுவை கடன் மீதிகளை அறவிடுதலின் முன்னேற்றம் தொடர்பில் கண் காணித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், மற்றும் அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள், வழங்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டில் அறவிடும் முன்னேற்றம், மற்றும் எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை அறிந்து ஒவ்வொரு நிறுவனங்களதும் நிலுவை கடன் மீதிகளும் குறிப்பிடப்பட்டு, அந்த நிறுவனங்களுக்கு, உரிய சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்குகளில் காணப்படும் மீதிகளில் மாறுபாடுகள் காணப்படுமிடத்து அவற்றை கணக்குப் பொழிப்புகள் ஊடாக சரிப்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டு சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லைகளுள் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிறுவனங்களுக்கு நி.பி.503(2)இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லைகளை மீளமைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற பொது வைப்புக் கணக்கிணக்க கூற்றுக்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கைகளை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், கிடைக்கப்பெற வேண்டிய 209 கணக்கு அறிக்கைகளிடையே, 2021.12.31ஆந் திகதியில் 204 அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மீதி 05 கணக்கு அறிக்கைகளையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது வைப்புக்கணக்குகளது மீதிகள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்தல் மற்றும் இணங்காத மீதிகள் தொடர்பில் பின்னூட்டல் மேற்கொள்ளப்படும். 43 அறிக்கைகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பொது வைப்புக் கணக்குகளில் உள்ள இணக்கம் செய்யப்படாத மீதிகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டிற்காக புதிய பொது வைப்புக் கணக்குகளை திறப்பதற்கு விண்ணப்பித்திருந்த கணக்குகளது எண்ணிக்கை 38 ஆகும். அக்கணக்குகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அரசுகளில் (சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய இராச்சியம்) சேவையாற்றி அந்த அரசுகளிடம் ஓய்வூதியம் பெறும் இலங்கையில் வசிக்கும் ஓய்வூதியர்கள் மற்றும் விதவைகளுக்காக ஓய்வூதியம் வழங்குவதற்கான முற்பணக் கணக்கொன்று பேணிச் செல்லப்படுகின்றது.

2021ஆம் ஆண்டில் இந்த முற்பண கணக்கின் கீழ் ரூ.1,392,487.63 தொகையானது ஓய்வூதியமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் 2020ஆம் ஆண்டில் மீளப் பெற்றுக் கொள்ளப்படாத அனைத்து நிலுவை தொகை உட்பட ரூ.2,657,156.85 ஆனது, மீளப் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீளப் பெறுவதற்கான ஆவணங்கள் உரிய அரசுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பணம் மீளப் பெறுதல்கள் இடம்பெறுவதால் 2021.12.30ஆந் திகதியில் நிலுவைத் தொகை ரூ. 132,141.72 காணப்பட்டதுடன், 2022ஆம் ஆண்டு பெப்ரவரி அளவில் அவை மீளப்பெற்றுக் கொள்ளப்படுவதற்கு சாத்தியமாகும்.

எதிர்பாராத மற்றும் அவசர தேவைகளுக்காக செலவிடும்பொருட்டு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் விசேட அலகுகளுக்கு முற்பணம் வழங்குதல் மற்றும் நி.பி.106இன் அடிப்படையில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் செலவு அலகுகளின் ஊடாக அறிக்கை செய்யப்படுகின்ற நிதி இழப்புகளை மீள நிரப்பும்பொருட்டு முற்பணம் வழங்கும் செயன்முறையானது திறைசேரி நானாவித முற்பணக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த முற்பணக் கணக்கின் ஊடாக முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட முற்பணத்தொகையில் 2021.01.01ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய மீதி ரூ.160,106,800.11 ஆகக் காணப்பட்டது. அந்த மீதிகளுள் ரூ. 17,596,538.42 தொகையானது 2021ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச கணக்குகள் திணைக்களமானது இந்த நிலுவை முற்பணத் தொகையை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு இடைத்தரகராக மட்டும் செயற்படுவதுடன், முற்பணத்தை அறவிடுவதற்கு நேரடியாகத் தலையிடுவதற்கான இயலுமை இல்லை. எவ்வாறாயினும் நிலுவை தொகையை அறவிட்டுக் கொள்ளும்பொருட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி தொடர்ச்சியாக பின்தொடர்வு செய்வதன் ஊடாக நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், குடியரசின் இறுதிக் கணக்குகளில் உள்ள நிதித் தரவுகளை சர்வதேச நாணய நிதியத்தின் 2014ஆம் ஆண்டுக்கான அரச நிதி புள்ளிவிபரவியல் தகவல்கள், கைந்நூலுக்கமைய வகைப்படுத்தப்பட்டு வரவுசெலவு மதிப்பீடு செய்யப்பட்ட மத்திய அரசின் அரச நிதி புள்ளிவிபரவியல் தயாரிக்கப்பட்டது.

அரசுக்குக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கையானது 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது அந்த நிறுவனங்களினது சமீபத்திய பட்டியல் அரச வியாபார திணைக்களம் மற்றும் அரச வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினூடாக வரவழைக்கப்பட்டதுடன் எம்மிடம் காணப்பட்ட அட்டவணையும் இற்றைவரைப்படுத்தப்பட்டது. அந்தப் பட்டியலுக்கமைய அரசிற்குச் சொந்தமான 224 வர்த்தக நிறுவனங்களுக்கு 2015 தொடக்கம் 2018 வரை 4 வருடங்களுக்கு நிதித் தகவல்களைச் சேகரிப்பதற்கு இந்தத் திணைக்களத்தின் ஊடாக தரவு உள்ளீட்டு படிவமொன்று (வநஅிடயவந) தயாரிக்கப்பட்டது. அந்தப் படிவமானது மேற்கூறப்பட்ட இரண்டு திணைக்களங்கள் ஊடாக அரச வியாபார நிறுவனங்களுக்கு அனுப்பபட்டன. அதற்குப் புறம்பாக நிதிக் கூற்றுக்களின் மென் பிரதிகள் மற்றும் வன்பிரதிகள் கொண்டு வரப்பட்டதுடன் அந்தத் தகவல்களும் தரவு உள்ளீட்டு படிவத்திற்கு எம்மால் உள்ளடக்கப்பட்டது. இவ்வாறு உள்ளடக்கப்பட்ட 896 நிதிக் கூற்றுக்களது நிதித் தகவல்கள் இவ்வருடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அரச நிதிப் புள்ளிவிபரவியல் கட்டமைப்பிற்கும் தேவையான, மாகாண சபைகளது நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரச நிதிப் புள்ளிவிபரவியல் தரவு கட்டமைப்பிற்குப் பொருத்தமான விதத்தில் தரவு உள்ளீட்டு படிவமொன்று (வநஅிடயவந) தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக 2015இற்குரிய தகவல்கள் வரவழைக்கப்பட்டு, 2015இற்கான அரச நிதி தகவல் புள்ளிவிபரவியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே உள்ளுராட்சி நிறுவனங்களிலும் அரச நிதி தகவல் புள்ளிவிபரவியல் தயாரிக்கப்படுவதற்கான ஆரம்ப கட்டமாக, கொழும்பு மாநாகர சபையின் 2015 தொடக்கம் 2018 வரையான நிதிக் கூற்றுக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய 233 காணிகள் மற்றும் கட்டிடங்களுக்குரிய விலைமதிப்பீட்டு அறிக்கைகள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு 2021ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அந்த மதிப்பீட்டு பெறுமதிகளை கணக்கு வைக்கும் செயற்பாட்டிற்கு உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளன.

அதன் ஊடாக 2021ஆம் அண்டில் இந்த செயற்பாட்டில் முன்னேற்றத்தைக் கண்டுகொள்ள முடிந்ததுடன், 1340 பில்லியன் ரூபாய்கள் மதிப்புள்ள காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு இதன் ஊடாக வாய்ப்புக் கிட்டியது.

அதனடிப்படையில் 60 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தமது நிறுவனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் எதுவுமில்லை என அறிவித்துள்ளதுடன், 10 நிறுவனங்கள் தமது நிறுவனத்தில் அடையாளங்காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. மீதி அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்களது காணி மற்றும்

கட்டிடங்கள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கில் மதிப்பீட்டுத் திணைக்களத்தை ஒருங்கிணைப்புச் செய்து 2021 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக இந்நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்பட்டன.

சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கான மருந்துகளை, முடிக்குரிய முகவர்கள் ஊடாக வழங்குவதற்குத் தேவையான தலையீட்டினை இந்தத் திணைக்களம் மேற்கொண்டதுடன், அதன் கீழ் 2021ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சிற்குரிய 21 இருப்புப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூ. 276,155,811.88 ஆகும்.

2021ஆம் ஆண்டில், 27 அரச கணக்குகள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற திறைசேரி அறிக்கைக்குத் தேவையான கணக்கு அறிக்கைகள் மற்றும் நிதி செயலாற்றுகை தொடர்பிலான தகவல்கள் தயாரிக்கப்பட்டு அறிக்கை செய்யப்பட்டன. மேலும், அந்த கூட்டத்தில் பங்குபற்றிய திணைக்கள பிரதிநிதிகளால், கூட்டங்களில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, திணைக்களத்தின் தொழில்சார் தலையீடுகள் வழங்கப்பட்டன.

2021ஆம் ஆண்டில் 70 அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள், 25 மாவட்டச் செயலகங்கள், 125 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குரிய மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் இந்தத் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டதுடன், கணக்கு அலகுகளது மாதாந்த கணக்குப் பொழிப்புகள் மின்னஞ்சல் ஊடாக கொணரப்பட்டு நேற ஊஜபுயுளு கட்டமைப்பிற்கு உரிய நேரத்தில் உள்ளடக்குவதன் ஊடாக மத்திய அரசின் நிறுவனங்களுக்கு திறைசேரி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான நிதித் தகவல்களை வெற்றிகரமாக வழங்க முடிந்துள்ளது. மாதாந்த கணக்கு பொழிப்புக்களை சமர்ப்பிக்க வேண்டிய இலக்குவைக்கப்பட்ட திகதிகள் 2021ஆம் ஆண்டு வழிகாட்டல் இலக்கம் 01இன் ஊடாக விதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக முதல் சில மாதங்கள் சில நிறுவனங்கள் தமது மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறியிருந்தாலும், பின்னர் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பின்னூட்டல் காரணமாக, வருட இறுதியில் அந்நிறுவனங்கள் உரிய திகதியில் தமது கணக்குப் பொழிப்புக்களை சமர்ப்பிக்கக்கூடியதாக இருந்தது.

மேலும், சேகரிக்கப்பட்ட நிதித் தகவல்களை, இலங்கை மத்திய வங்கி, புள்ளிவிபரவியல் திணைக்களம், அரச நிதிக் கொள்கைகள் மற்றும் திணைக்களம், திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு மேலதிக தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு பயன்படுத்தக்கூடிய விதத்தில் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1947 செப்டெம்பர் 24ஆந் திகதி வெளியிடப்பட்ட 9773ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக தாபிக்கப்பட்ட அரச சேவை பரஸ்பர உத்தரவாத நிதியமானது, நி.பி.880-893 இன் ஊடாக காட்டப்பட்ட தேவைப்பாட்டின் அடிப்படையில் பேணிச் செல்லப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு வினைத்திறனாக பேணிச் செல்லப்படுவதுடன், அரச உத்தியோகத்தர்களின் நிதி தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆபத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

2021இல் அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசோதித்து சரியாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் அங்கத்துவத்தை வழங்க முடியாத விண்ணப்பங்கள் மீள அனுப்பப்பட்டதுடன், மீதி 85 விண்ணப்பங்கள் முகாமைத்துவ சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதல், அங்கத்துவ பணம் கிடைப்பனவு, அவற்றை மீளச் செலுத்துதல் உள்ளிட்ட ஏனைய தகவல்கள் உள்ளடக்கிய தகவல் கட்டமைப்பும் இற்றைவரைப்படுத்தப்பட்டுள்ளது.

டபிள்யு.ஏ. சமன்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

## அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீட்டு 2021 | | குறிப்பு | உண்மை நிலை 2021 | உண்மை நிலை திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 361,501,500 | 272,645,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 558,731 | 20,835 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 27,143,236 | 6,084,175 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 281,578 | 32,469 | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 389,485,045 | 278,782,479 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 389,485,045 | 278,782,479 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 1,524,935 | 11,310 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 387,960,110 | 278,771,169 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |
| 50,640,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 50,575,297 | 43,069,819 | ஏசீஏ-2(ii) |
| 13,750,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 13,356,741 | 10,806,213 | ஏசீஏ-2(ii) |
| 1,075,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 721,274 | 1,065,081 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 65,465,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 64,653,312 | 54,941,113 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 1,350,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 1,106,667 | - | ஏசீஏ-2(ii) |
| 2,800,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 2,731,589 | 405,870 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 300,000 | திறன் விருத்தி | 14 | 30,000 | 205,300 | ஏசீஏ-2(ii) |
| 14,300,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 6,439,055 | 10,508,280 | ஏசீஏ-2(ii) |
| 18,750,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 10,307,311 | 11,119,450 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 54,590 | 16,310 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 11,672,477 | 5,428,048 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | 278,633,944 | 208,275,388 | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 290,361,011 | 213,719,746 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 365,321,634 | 279,780,309 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 22,638,476 | (1,009,140) | |
| | பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி | | 22,638,476 | (1,009,140) | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | - | ஏசீஏ-3 |
| 84,215,000 | | | 22,638,476 | (1,009,140) | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 40,122,186 | 37,560,749 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5.'.5ஏ | 196,977,338 | 208,490,771 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 237,099,524 | 246,051,520 |
| **தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 196,468,672 | 208,486,246 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 40,122,186 | 37,560,749 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | - |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 508,666 | 4,525 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 237,099,524 | 246,051,520 |

பக்க இலக்கம் 7 முதல் 36 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 37 முதல் 44 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: எஸ். ஆர். ஆட்டிகல | பெயர்: டபிள்யூ.ஏ. எஸ். உபநந் | பெயர் : டபிள்யூ.ஏ.எச். பிரணாந்து |
| பதவி : செயலாளர, நிதி அமைச்சகம் | பதவி : பணிப்பாளர் நாயகம் | பதவி : துணை இயக்குனர் |
| திகதி : 2022.02. 27 | திகதி : 2022.02.22 | திகதி : 2022.02. 22 |
| S. R. Attygalle<br>Secretary to the Treasury and<br>Secretary to the Ministry of Finance<br>The Secretariat<br>Colombo 01 | W.A. Samantha Upananda<br>Director General<br>Department of State Accounts<br>General Treasury<br>Colombo 01 | W.A. Hasara Fernando<br>Deputy Director (Finance)<br>Department of State Accounts<br>General Treasury<br>Colombo 01. |

# 3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

## 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
## காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை 2021 ரூபா | திருத்தப்பட்ட 2020 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | |
| இலாபம் | - | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 2,800,551 | 2,396,029 |
| ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | 281,578 | 32,470 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 361,501,500 | 272,645,000 |
| முற்பணங்களை அறவிடல் | 10,530,601 | 4,619,117 |
| வைப்புக்களின் பெறுகை | 558,731 | 20,835 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 375,672,961 | 279,713,451 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 63,904,538 | 53,774,862 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 721,274 | 1,065,081 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 11,070,821 | 338,287 |
| ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | 278,633,944 | 208,275,388 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 1,524,935 | 11,310 |
| முற்பணக் கொடுப்பனவு | 9,455,548 | 5,112,763 |
| வைப்புக் கொடுப்பனவு | 54,590 | 16,310 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 365,365,650 | 268,594,001 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 10,307,311 | 11,119,450 |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 10,307,311 | 11,119,450 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 10,307,311 | 11,119,450 |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (10,307,311) | (11,119,450) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

3

## 3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) நிதிக் கூற்றுக்களுக்கான படிவங்களில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்

2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

## 3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| | | | | | |
| ஏற்புடையதாகாது | | | | | |
| | | | | | |

## 3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் ரூ | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு ரூபா. | இறுதி ஒதுக்கீடு ரூபா. | | |
| மீண்டெழும் | 63,390,000.00 | 65,465,000.00 | 64,653,312.00 | 98.76% |
| மூலதனம் | 17,650,000.00 | 18,750,000.00 | 10,307,311.00 | 54.97% |

## 3.8 நி.பி. குறிப்பு *208* பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொடர் இல. | அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் ரூபா. | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு ரூபா. | இறுதி ஒதுக்கீடு ரூபா. | | |
| 01 | நிதி அமைச்சு | ** | 12,000,000.00 | 12,000,000.00 | 11,046,310.35 | 92.05% |
| | | | | | | |

**** பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தில் கணனி ஆய்வுகூடமொன்றை தாபித்தல்.**

## 3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றகை

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2020.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி ரூபா. | 31.12.2021 ஆந் திகதியில் நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி ரூ. | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது ரூபா. | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 40,122,186.13 | 40,122,186.13 | - | 100% |
| 9153 | காணி | - | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | | | |

## 3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | ටීපීඩී/ඒ/ඩීඑස්ඒ/2/21/06 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | |
| දිනය / திகதி / Date | 2022 මැයි 31 දින | | |

ගණන්දීමේ නිලධාරී
රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

**රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුවේ 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.**

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 තත්ත්වාගණනය කළ මතය

රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුවේ 2021 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශවලින් සමන්විත 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(2) වගන්තිය ප්‍රකාරව ගණන්දීමේ නිලධාරී වෙත වාර්ෂික විස්තරාත්මක කළමනාකරණ විගණන වාර්තාව යථා කාලයේදී නිකුත් කරනු ලැබේ. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

මෙම වාර්තාවේ 1.6 ඡේදයේ දක්වා ඇති කරුණුවලින් වන බලපෑම හැර, මූල්‍ය ප්‍රකාශනවලින් 2021 දෙසැම්බර් 31 දිනට රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහය පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

1.2 **තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම**

මෙම වාර්තාවේ 1.6 ඡේදයේ දක්වා ඇති කරුණු මත පදනම්ව මාගේ මතය තත්ත්වාගණනය කරනු ලැබේ. ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මූල්‍ය ප්‍රකාශන සම්බන්ධයෙන් මාගේ වගකීම, විගණකගේ වගකීම යන වගන්තියේ තවදුරටත් විස්තර කර ඇත. මාගේ මතය සඳහා පදනමක් සැපයීම උදෙසා මා විසින් ලබා ගෙන ඇති විගණන සාක්ෂි ප්‍රමාණවත් සහ උචිත බව මාගේ විශ්වාසයයි.

1.3 **මූල්‍ය ප්‍රකාශන සම්බන්ධයෙන් ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරීගේ හා ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම**

පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව හා 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 38 වගන්තියේ සඳහන් විධිවිධානවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිඹිබු කෙරෙන පරිදි මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීම හා වංචා සහ වැරදි හේතුවෙන් ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකි වනු පිණිස අවශ්‍යවන අභ්‍යන්තර පාලනය තීරණය කිරීම ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16(1) වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුව විසින් වාර්ෂික හා කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වා ගෙන යා යුතුය.

ජාතික විගණන පනතේ 38(1)(ඇ) උප වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය පාලනය සඳහා සඵලදායි අභ්‍යන්තර පාලන පද්ධතියක් සකස් කර පවත්වා ගෙන යනු ලබන බවට ගණන්දීමේ නිලධාරී සහතික විය යුතු අතර එම පද්ධතියේ සඵලදායිත්වය පිළිබඳව කලින් කල සමාලෝචනයක් සිදු කර ඒ අනුව පද්ධතිය ඵලදායි ලෙස කරගෙන යාමට අවශ්‍ය වෙනස්කම් සිදු කරනු ලැබිය යුතුය.

1.4 **මූල්‍ය ප්‍රකාශන විගණනය පිළිබඳ විගණකගේ වගකීම**

සමස්ථයක් ලෙස මූල්‍ය ප්‍රකාශන, වංචා හා වැරදි හේතුවෙන් ඇතිවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් තොර බවට සාධාරණ තහවුරුවක් ලබාදීම සහ මාගේ මතය ඇතුළත් විගණන වාර්තාව නිකුත් කිරීම මාගේ අරමුණ වේ. සාධාරණ සහතිකවීම උසස් මට්ටමේ සහතිකවීමක් වන නමුත්, ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනය සිදු කිරීමේදී එය සැම විටම ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන් අනාවරණය කර ගන්නා බවට වන තහවුරු කිරීමක් නොවනු ඇත. වංචා සහ වැරදි තනි හෝ සාමූහික ලෙස බලපෑම නිසා ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇති විය හැකි

අතර, එහි ප්‍රමාණාත්මක භාවය මෙම මූල්‍ය ප්‍රකාශන පදනම් කර ගනිමින් පරිශීලකයන් විසින් ගනු ලබන ආර්ථික තීරණ කෙරෙහි වන බලපෑම මත රඳා පවතී.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනයේ කොටසක් ලෙස මා විසින් විගණනයේදී වෘත්තිය විනිශ්චය සහ වෘත්තිය සැකමුසුබවින් යුතුව ක්‍රියා කරන ලදී. මා විසින් තවදුරටත්,

- ප්‍රකාශ කරන ලද විගණන මතයට පදනමක් සපයා ගැනීමේදී වංචා හෝ වැරදි හේතුවෙන් මූල්‍ය ප්‍රකාශනවල ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන් ඇතිවීමේ අවදානම් හඳුනාගැනීම හා තක්සේරු කිරීම සඳහා අවස්ථාවෝචිතව උචිත විගණන පරිපාටි සැලැසුම් කර ක්‍රියාත්මක කරන ලදී. වරදවා දැක්වීම් හේතුවෙන් සිදුවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් සිදුවන බලපෑමට වඩා වංචාවකින් සිදුවන්නා වූ බලපෑම ප්‍රබල වන්නේ ඒවා දූස්සන්ධානයෙන්, ව්‍යාජ ලේඛන සැකසීමෙන්, චේතනාන්විත මගහැරීමෙන්, වරදවා දැක්වීමෙන් හෝ අභ්‍යන්තර පාලනයන් මග හැරීමෙන් වැනි හේතු නිසා වන බැවිනි.

- අභ්‍යන්තර පාලනයේ සඵලදායිත්වය පිළිබඳව මතයක් ප්‍රකාශ කිරීමේ අදහසින් නොවුවද, අවස්ථාවෝචිතව උචිත විගණන පරිපාටි සැලසුම් කිරීම පිණිස අභ්‍යන්තර පාලනය පිළිබඳව අවබෝධයක් ලබා ගන්නා ලදී.

- හෙළිදරව් කිරීම් ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවල ව්‍යුහය සහ අන්තර්ගතය සඳහා පාදක වූ ගනුදෙනු හා සිද්ධීන් උචිත හා සාධාරණ අයුරින් මූල්‍ය ප්‍රකාශනවල ඇතුළත් බව ඇගැයීම.

- මූල්‍ය ප්‍රකාශනවල ව්‍යුහය හා අන්තර්ගතය සඳහා පාදක වූ ගනුදෙනු හා සිද්ධීන් උචිත හා සාධාරණව ඇතුළත් වී ඇති බව සහ හෙළිදරව් කිරීම් ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවල සමස්ථ ඉදිරිපත් කිරීම අගයන ලදී.

මාගේ විගණනය තුළදී හඳුනාගත් වැදගත් විගණන සොයාගැනීම්, ප්‍රධාන අභ්‍යන්තර පාලන දුර්වලතා හා අනෙකුත් කරුණු පිළිබඳව ගණන්දීමේ නිලධාරී දැනුවත් කරමි.

## 1.5 වෙනත් නෛතික අවශ්‍යතා පිළිබඳ වාර්තාව

